# திருக்குறட் போட்டி 2020/ 2021

# பிரிவு ஏ ( 11 – 12 வயது )

வயதெல்லை **01/09/2008 – 31/08/2009** ற்கும் இடைப்பட்டவர்கள்

மனனம் - 6 குறள்கள்
தெளிவுரை – 3 குறள்கள் ( 7 – 10 வரை )
[illegible] )

1. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

2. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

3. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

4. ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்.

5. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

6. பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமும் தரும்.

7. நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு.
**தெளிவுரை** – நட்புக் கொள்வது சிரித்து மகிழ்வதற்காக அல்ல. நண்பர் தவறு செய்யும்போது கண்டித்துத் திருத்துவதற்காகவே ஆகும்.

8. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.
**தெளிவுரை** – தன் நெஞ்சு உண்மையை அறிந்திருக்கப் பொய் சொல்லாதீர். அவ்வாறு பொய் சொன்னால் பின் அச்செயல் குறித்து தனது நெஞ்சே தன்னை வருத்தும்.

9. சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்.
**தெளிவுரை** – சினம் என்னும் தீப்பண்பு யாரிடத்தில் தோன்றுகிறதோ, அது அவரை அழிப்பதோடு சுற்றம் என்னும் அவரது காப்புக்குரிய துணையையும் எரிக்கும்.

10. செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.
**தெளிவுரை** - செய்வதற்கு அருமையான செயல் வேறென்ன உண்டு நட்புக் கொள்வது போல்? அந்த நட்புப் போல் வேறென்ன உண்டு துணை?

புள்ளியிடும் முறை

| அவை வணக்கம், நிற்கும் நிலை (5புள்ளிகள்) | வெளிப்பாடு (முகபாவம்) தொனி (10புள்ளிகள்) | மனனம் (25புள்ளிகள்) | தெளிவுரை (20புள்ளிகள்) | பலுக்குதல் (உச்சரிப்பு) (25புள்ளிகள்) | ஒரு சொல்லுக்குரிய குறள்கள் (15புள்ளிகள்) | மொத்தப் புள்ளிகள் (100 புள்ளிகள்) |
|---|---|---|---|---|---|---|

பள்ளியில் போட்டி நடைபெறவுள்ள நாள்:..........................................

## பேச்சுப் போட்டி 2020/ 2021

### பிரிவு ஏ ( 11–12 வயது ) - எம்மால் முடியும்

வயதெல்லை - 01/09/2008 – 31/08/2009 ற்கும் இடைப்பட்டவர்கள்

அனைவருக்கும் எனது பணிவான வணக்கம். 'எம்மால் முடியும்' என்பது பற்றி நான் பேச வந்துள்ளேன்.

பலரும் எம்மைப் பாராட்ட வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். எல்லோரும் நம்மைப் போற்ற வேண்டும் ; புகழ வேண்டும் என்று விரும்புகிறோம். பலரின் பாராட்டுதலையும் போற்றுதலையும் புகழ்ச்சியையும் பெறவேண்டுமானால் நாம் என்ன செய்ய வேண்டும்? 'எம்மால் முடியும்' என்பதை நம் கொள்கையாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

சொல்பவர் யாராக இருந்தாலும் தீமையைச் செய்ய முடியாது என்றே சொல்ல வேண்டும். 'எம்மால் முடியும்' என்று எல்லா நேரத்திலும் சொல்லலாமா? சொல்லக்கூடாது. தீமைகளைச் செய்யச் சொன்னால் முடியாது என்று சொல்ல வேண்டும். நல்லவற்றைச் செய்ய முடியும் என்றே சொல்ல வேண்டும். நமக்கும் பிறர்க்கும் நன்மை தரும் செயல்களைச் செய்யத் தயங்காமல், எம்மால் முடியும் என்று சொல்ல வேண்டும் எத்தனை இடர் வந்தாலும் இதனைச் செய்ய எம்மால் முடியும் என்று தன்னம்பிக்கையோடும் நன்னம்பிக்கையோடும் சொல்ல வேண்டும். சொன்னால் மட்டும் போதுமா? சொன்னதைச் செய்து முடிக்க வேண்டும்.

பள்ளிக்குச் செல்ல முடியும் ; பாடங்களைப் படிக்க முடியும் ; தேர்வுகளில் வெற்றி பெற முடியும் ; பட்டங்களைப் பெற முடியும் ; பதவிகளைப் பெற முடியும் ; அயராமல் உழைக்க முடியும் ; பொருளை ஈட்ட முடியும் ; குடும்ப உறவுகளைக் காக்க முடியும் ; பலருக்கும் பயன்படுமாறு வாழ முடியும் ; தாயை – தந்தையைக் காக்க முடியும் ; தாய்மொழியாம் தமிழைக் கற்க முடியும் ; தமிழர்களோடு தமிழில் பேச முடியும். இப்படி நல்லவை அனைத்தையும் எம்மால் செய்ய முடியும் - முடியும் - முடியும் என முடித்துக் காட்ட வேண்டும். முயன்றால் முடியாதது எதுவும் இல்லை என்னும் தெளிவு நமக்குத் தேவை. 'முயற்சி திருவினை ஆக்கும்' என்னும் வள்ளுவர் கூற்றை உள்ளத்தில் நிறுத்துவோம்!

நன்றி! வணக்கம்!

புள்ளியிடும் முறை

| அவை வணக்கம் (5 புள்ளிகள்) | நிற்கும் நிலை (5 புள்ளிகள்) | வெளிப்பாடு (முகபாவம்) (15 புள்ளிகள்) | மனனம் (25 புள்ளிகள்) | பலுக்குதல் (உச்சரிப்பு) (25 புள்ளிகள்) | பேச்சில் தெளிவு, தொனி (25 புள்ளிகள்) | மொத்தப் புள்ளிகள் (100 புள்ளிகள்) |
|---|---|---|---|---|---|---|

பள்ளியில் போட்டி நடைபெறவுள்ள நாள்:..........................................................

கொடுக்கப்பட்ட பேச்சுத் தாளின் கட்டத்தினுள் உள்ள பேச்சை தொடக்கத்தில் இருந்து முடிவு வரை எதுவித மாற்றமும் செய்யாமல், தாளில் உள்ளதை மட்டும் பேச வேண்டும்.